# சவாலை சமாளி..

(ஞாயிற்றுக்கிழமை இரவு 07.00 மணி முதல் 08.00 மணி வரை)

உங்கள் ஸ்ரீசங்கரா தொலைக்காட்சியில் ஞாயிற்றுக்கிழமை இரவு 07.00 மணி முதல் 08.00 மணி வரை ஒளிபரப்பாகிவரும் புத்தம் புதிய ஆன்மீக வினா விடை நிகழ்ச்சி "சாதுர்ய்யம்" .

தொலைக்காட்சியே பொழுதுபோக்குக்காகத்தான் என்ற நிலையில் பொழுதை பயனுள்ள வகையில் கழித்திடவும், ஆன்மீக அறிவை அதிகரித்துக்கொள்ளவும் ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்நிகழ்ச்சி சுமார் ஒரு மணிநேரம் ஒளிபரப்பாகிறது.

இருபத்தி நான்கு மணி நேரமும் இறைவுணர்வை வளர்க்கும் வகையில் பல்வேறு வகையிலான பக்தி நிகழ்ச்சிகளை வழங்கிவரும் ஸ்ரீசங்கரா டிவியின் இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் கலந்துகொண்டு தங்களது ஞானவுணர்வை வெளிக்கொணரும் வகையில் வடிவமைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்து திறமையை வெளிப்படுத்துகின்றனர்.

நிகழ்ச்சியில் எழுப்பப்படும் வினாக்களுக்கு பங்கேற்றுள்ள மாணவர்கள் மட்டுமின்றி பார்வையாளர்களும் விடையளிக்கும் வகையில் ஆர்வத்தை தூண்டும் அற்புதம் இந்நிகழ்ச்சியில் அரங்கேறுகிறது.

நிகழ்ச்சியை நடத்தும் தொகுப்பாளர் இனிமையான குரல் வளத்தோடு எழுப்பும் ஆன்மீகம் தொடர்பான கேள்விகளும் அதற்கு பள்ளி மாணவ-மாணவியர் அளிக்கும் பதில்களும் நேயர்களின் ஆன்மீக அறிவை வளர்க்கும் என்பதில் ஐயமில்லை.

# தல வரலாற்றுப் பெருமைகள்

(தினந்தோறும் காலை 11.30 மணி முதல் 12.00மணி வரை )

உங்கள் ஸ்ரீசங்கரா தொலைக்காட்சியில் தினந்தோறும் காலை 11.30 மணி முதல் 12.00 மணி வரை ஒளிபரப்பாகிவரும் நிகழ்ச்சி **“தேவதா தர்ஷ்ஷன்”.**
ஆலயம் என்றால் ஆன்மா லயிக்கின்ற இடம் என்று பொருள். அப்படி நமது இதயங்களை இறைவனோடு ஐக்கியப்படுத்தும் அரிய முயற்சியாள் உலா வரும் இந்நிகழ்ச்சியில் தமிழகம் கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள ஆலயங்கள், அவற்றின் தல வரலாற்றுப் பெருமைகள், அந்த ஆலயத்தில் அமைந்துள்ள சன்னதிகள் மற்றும் திருவிழா விபரங்கள் யாவும் விளக்கமாக விவரிக்கப்படுகின்றன. ஆலயத்திற்கு சென்று ஆண்டவனை வழிபட்ட ஒரு புதிய அனுபவத்தை தொலைக்காட்சி மூலமாக நமக்கு வழங்கும் இந்நிகழ்ச்சியில் சைவ-வைனவ திருத்தலங்கள் மட்டுமின்றி கிராம தேவதைகளின் ஆலயங்கள் குறித்த அரிய தகவல்களும் இடம்பெறுகின்றன.
காட்சிகளுடன் கருத்தை கவரும் வகையில் எந்தெந்த ஆலயங்களுக்கு என்னென்ன பரிகாரம், வழிபாட்டு முறைகள், சென்று வருவதற்கான வழிகாட்டு முறைகள் என பல்வேறு அம்சங்கள் படம்பிடிக்கப்பட்டு ஒளிபரப்பாகும் இந்நிகழ்ச்சியில் காண்போரின் நெஞ்சம் உருகும் வகையிலான அற்புதமான பாடல்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.